[திரு. எம். சின்னராஜ்] [1981 ஏப்ரல் 2

வருகின்ற தண்ணீரைச் சேமித்து வைக்கின்ற திட்டங்களைப் பொறுத்தவரையில் பி.சி. ரேஷியோ பார்க்காமல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நதிகளைத் தேசியமயமாக்கும் கொள்கையினைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. அதைப் பல கட்டங்களிலே நாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். எதையெல்லாமோ தேசியமயமாக்கிக் கொண்டிருக்கின்ற மத்திய அரசு முதல் கட்டமாக நதிகளைத் தேசியமயமாக்கி நதிநீரைப் பகிர்ந்து கொடுக்கின்ற திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குழாய் கிணறுகளுக்கென்று வாரியம் ஏற்படுத்துகின்ற முயற்சியை அரசு மேற்கொண்டு நிறைவேற்ற இருக்கின்றது. இதேபோல் நதி நீர்ப் பங்கீட்டுக்கும் ஒரு அமைப்பு Water Management Board நிறுவவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3 ஆம் நாள்) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

102. 1981—82 ஆம் ஆண்டின் பாசனம் பற்றிய மானிய சோரிக்கை மீதான நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் உரை (தமிழ், ஆங்கிலம்).

103. 1981-82 ஆம் ஆண்டில் பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

104. 1080-81 ஆம் ஆணடு நீர்ப்பாசனம் மீதான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தின் போது சட்ட மன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் அளித்த ஆலோசனை களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவர அறிக்கை (தமிழ்).